THE HON. THIRU C. N. ANNADURAI : I am quite sure that, as an Advocate, he would not advocate such a dangerous course.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இந்த விஜிலன்ஸ் கமிட்டிகள் மதராஸ் ஸ்டேட்டில் மட்டும் என்று சொன்னார்கள். இதரப் பகுதிகளிலும் இது மாதிரி கமிட்டிகள் அமைக்கப்படுமா? அப்படி ஏதாவது அமைக்கப்பட்டிருக்கிறதா, பிற மாவட்டங்களில்?

THE HON. THIRU C. N. ANNADURAI : I do not know the facts about this but if the hon. Member wants that such committees should be established on an extensive scale, I would like to endorse his view.

திரு. எம். சுரேந்திரன் : ஒழுக்கக் கேடுகள் என்பது உடனே பார்க்கக் கூடிய இடங்களில் மட்டும் அமைவது அல்ல. ஒழுக்ககேடுகள் பாவலாக ஏற்படுகின்றன. அதன் பிரதிபலிப்பு வசதி படைத்தவர்களிடத்திலிருந்து தான் பொதுவாக உண்டாகிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : ஒழுக்கக்கேடு என்பது வசதி படைத்தவர்கள் வசதி படைக்காதவர்கள் ஆகிய அனைவரிடத்திலும் சிலரிடத்தில் அந்த ஒழுக்கக்கேடுகள் ஏற்பட்டு விடுகின்றன. இது ஒழுக்கக் கேடுகளை நீக்குவதற்காக மட்டுமல்ல. அமைதியை ஏற்படுத்த, தீய சக்திகளை ஒடுக்குவதற்கு, அதற்காக போலீஸ் நடவடிக்கை எடுக்கிறபோது அதற்குத் துணையாக இருக்க என்று பல்வேறு பணிகள் அதற்கு இருக்கின்றன.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : இந்தக் கண்காணிப்புக் கமிட்டிகளுக்கு யார் யாரால் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அந்தந்த வட்டத்து போலீஸ் உயர்தர அதிகாரிகளால்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas there is widespread fear among the public that the members belonging to some political parties will pump in political views into these committees and they cannot be devoid of the political influence of their parties, will this Government think of the possibility of appointing members who do not belong to any political party, who are above suspicion and who are above politics. As only such kind of men could be drafted, will the Government reconsider the reconstitution of these committees on these basis?

THE HON. THIRU C. N. ANNADURAI : I would, first of all, request the hon. Member to reconstitute his question. He was talking about political considerations and he also used the word 'suspicion'. To have certain political views is not to be considered as 'suspicion'. As a matter of fact, in this Committee, if we want only non-party persons, they may not be in a position to persuade others not to do this thing or that thing. Therefore, people belonging to different political parties are there. As for my hon. Friend's apprehension that they would pump in their political views, I would only ask him to bear in mind that political parties have got pumping stations every evening.

1968 மார்ச் 19]

பிரதமர்—முதலமைச்சர் சந்திப்பு

*247 வினு.—திரு. கரு. சீமைச்சாமி :
திரு வி. கே. கோதண்டராமன் } மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ல் மதுரை விமான நிலையத்தில் இந்திய பிரதம மந்திரி அவர்களும் தமிழக முதல் அமைச்சர் அவர்களும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினுர்களா ?

(இ) ஆமெனில், அதன் விபரம் பேரவை மேஜை மேல் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : (அ) தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் 1967 ஆகஸ்ட் 24-ந் தேதியன்று மதுரை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்ததால், இந்திய பிரதம மந்திரி அவர்கள் வருகைதந்தபோது அவரை அன்று மதுரை விமான நிலையத்தில் சந்தித்தார். பிரதம மந்திரி அவர்களைக் காணவேண்டுமென்ற நாகரிகப் பண்பிற்கிணங்க சந்தித்தாரேயன்றி, முறையான உரையாடல் ஏதும் நிகழவில்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : பத்திரிகை வாயிலாகப் பார்த்தோம். நம் ராஜ்யத்தில் இருக்கக்கூடிய பல குறைகளைப்பற்றி அவர்களிடத்தில் பேச்சுவார்த்தை நடத்தியதாக. ஏதோ முறைக்காக காணச் சென்றதாக முதல் அமைச்சர் அவர்கள் கூறுகிறுர்கள் அப்படிச் சொல்லக்கூடிய அளவிற்கு, அந்த பேச்சுவார்த்தை நடத்தியதை சொல்லமுடியாத அளவிற்கு இருந்ததா ? அப்படியிருந்தால் அதையாவது சொல்லிவிடுங்கள். ஏதாவது இருந்தது என்றுல் அதைச் சொல்வது நலமாகயிருக்குமல்லவா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : பேச்சுவார்த்தை நடத்துவது என்பது முன்கூட்டியே இரு தலைவர்களும் இன்னதைப்பற்றிப் பேசவேண்டுமென்று அறிவித்துக்கொண்டு பேச்சுவார்த்தை நடத்துவதுதான் அவர்கள் எடுத்துச் சொல்லக்கூடிய பேச்சுவார்த்தையாகும். ஒரு நாட்டுப் பிரதமர் அவர்களும் ஒரு மாநில முதல் அமைச்சர் அவர்களும் சந்திப்பார்களானுல் குடும்ப விவகாரங்களைப்பற்றி பேசிக்கொண்டிருப்பார்கள் என்று யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள். பல அரசியல் பிரச்னைகளையும் பேசியிருப்பார்கள். அவைகள் எல்லாம் திட்டமிடப்பட்டு, முறைப்படுத்தப்பட்டு பேசப்பட்ட பேச்சுக்கள் அல்ல.

DR. H. V. HANDE : With regard to these frequent visits by the Prime Minister or the Deputy Prime Minister, is there any procedure that is adopted by this Ministry by way of informing them whether they can come or not? There is a general feeling outside that the Chief Minister asked the Prime Minister not to come to Madras and that the Prime Minister did not pay heed and came there. Will the Chief Minister give a categorical answer about the procedure adopted whenever dignitaries come to Madras? முற்பகல் 10-00

THE HON. THIRU C. N. ANNADURAI : I never thought that my hon. Friend will touch upon such a delicate subject as that. I would like to give a general answer to that question. Whenever the Prime Minister or any Central Government dignitary proposes to come to this State on various functions, they inform the State Government and the State Government give certain suggestions. In that way various suggestions have been given to various dignitaries at various periods.